**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**C.C.1/18** P.W. 3

Deposition of witness for Prosecution:

| | | | |
|---|---|---|---|
| Name | :திரு. கோபாலகிருஷ்ணன் | Father's Name | : ராஜகோபால் |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | :17.03.2020 | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 17.03.2020

**முதல் விசாரணை.**

நான் கீச்சாங்குப்பம் நாகப்பட்டினத்தில் குடியிருந்து வருகிறேன். நான் மீன்பிடி தொழில் செய்துவருகிறேன். எனது நண்பர் பெயர் முத்துக்குமார் ஆகும். நானும் எனது நண்பர் முத்துக்குமாரும் கடந்த 3.2.2016ம் தேதி வேளாங்கண்ணி மாதாகோவிலுக்கு சாமி கும்பிட சென்றிருந்தோம். அப்பொழுது மதியம் சுமார் 1 ஒருமணியளவில் வேளாங்கண்ணி பழைய மாதா கோவில் குளம் பகுதி அருகே டாய்லெட்குக்கு அருகில் நானும் எனது நண்பரும் சென்றோம். அப்பொழுது காணாமல் போன குழந்தையோடு அந்த குழந்தையின் அம்மாவும் எதிரிகள் இருவரும் ஒன்றாக அமர்ந்து டாய்லெட்டுக்கு அருகில் பேசிக்கொண்டிருந்தனர். அப்பொழுது நானும் எனது நண்பரும் அங்கிருந்தபொழுது நான் மொபைல் போனை யூஸ் பண்ணிக்கொண்டிருந்தேன். அப்பொழுது அந்த குழந்தையின் அம்மா குழந்தையை எதிரிகளிடம் ஒப்படைத்துவிட்டு டாய்லெட்டு போய்வதற்காக டாய்லெட்டுக்குள் சென்றது. அப்பொழுது நாங்கள் அங்கிருந்து பக்கத்தில் சாமான் வாங்குவதற்காக பக்கத்தில் உள்ள கடைக்கு சென்றோம். நாங்கள் ஒரு 10 நிமிடத்தில் சாமான் வாங்கிகொண்டு திரும்ப அந்த டாய்லெட்கு அருகில் என்னுடைய பைக்கை நிறுத்தியிருந்ததை எடுப்பதற்காக நானும் முத்துக்குமாரும் சென்றபொழுது அந்த டாய்லெட்கு அருகில் அந்த குழந்தையின் அம்மா அழுதுக்கொண்டிருந்தார் என்னவென்று அந்த குழந்தையின் அம்மாவிடம் நானும் எனது நண்பர் முத்துக்குமாரும் விசாரித்துத்தோம். அதற்கு அந்த குழந்தையின் அம்மா தன்னுடைய குழந்தையை காணவில்லை என அழுதுக்கொண்டிந்தார். நாங்கள் விசாரித்தபொழுது அந்த

அம்மா எங்களிடம் எதிரிகள் இருவரும் குழந்தையை கொண்டு சென்றுவிட்டதாக சொல்லி



அழுதார். நான் அந்த அம்மாவிடம் நீங்கள் எந்த ஊர் அம்மா என்று கேட்டேன். அவர் தான் தூத்துக்குடியை சார்ந்த சுகன்யா என்று சொன்னார். எதிரிகள் இருவரையும் அந்த அம்மாவிடம் எப்படி உங்களுக்கு பழக்கம் என்று அந்த அம்மாவிடம் கேட்டேன். அதற்கு அவர் தான் வேளாங்கண்ணியில் பேன்ஸி கடையில் வேலைப்பார்ப்பதாகவும் எதிரிகள் இருவரும் இரண்டு முறை போன்ஸி கடைக்கு வந்த வகையில் தனக்க பழக்கம் என்று சொன்னார். அந்த அம்மா தொடர்ந்து அழுதுக்கொண்டே இருந்தார். நானும் எனது நண்பர் முத்துக்குமாரும் குழந்தையையும் ஆஜர் எதிரிகள் இருவரையும் வேளாங்கண்ணியில் ஒரு ஒருமணிநேரம் அக்கம் பக்கம், கடற்கரை பக்கம், கோயில் பக்கம் எல்லா இடங்களிலும் தேடினோம். ஆனால் கிடைக்கவில்லை. ஆகவே சுகன்யாவிடம் சென்று சுகன்யாவை பார்த்து போலிசில் கம்லைண்ட் கொடுங்கள் என்று சொல்லிவிட்டு நாங்கள் வீட்டிற்கு வந்துவிட்டோம். பிறகு சம்பவம் நடந்து 8 மாதம் கழித்து நீயூஸ் பேப்பரில் செய்தி வந்ததை படித்தேன். இந்த வழக்கை சிபிசிஐடி எடுத்து நடத்துவதாகவும் செய்திவந்ததை படித்துப்பார்த்து நானும் எனது நண்பர் முத்துக்குமாரும் சிபிசிஐடி அலுவலகம் சென்று நாங்கள் நடந்த விபரத்தை சொன்னோம். சிபிசிஐடி ஆய்வாளர் நாங்கள் சொன்ன விபரங்களை வாக்குமூலமாக பதிவு செய்து கொண்டார். பிறகு 23.3.2017 அன்று சிபிசிஐடி போலிசில் இருந்து எனக்கு போன் மூலம் தகவல் வந்தது. சிபிசிஐடி போலிசார் காணாமல் போன கடத்தப்பட்ட குழந்தையையும் கடத்திய எதிரிகளையும் பிடித்து வைத்திருப்பதாகவும் என்னையும் முத்துக்குமாரையும் வந்து அடையாளம் காட்ட சொல்லி போனில் சொன்னதன் பேரில் நாங்கள் 23.3.2017 அன்று மதியம் 1 மணிக்கு சிபிசிஐடி அலுவலகம் சென்றோம். அங்கு கடத்தப்பட்ட குழந்தையையும் ஆஜர் எதிரிகளையும் பார்த்தோம். ஆய்வாளரிடம் எதிரிகளை குறித்து அடையாளம் சொன்னோம். எதிரிகள் இருவரையும் நாங்கள் பார்த்து அடையாளம் காட்டினோம். குழந்தையையும் பார்த்து அடையாளம் காட்டினோம். குழந்தையின் முகம் ஞாபகத்தில் உள்ளது. அங்கு வைத்து எதிரிகளை நான் சிபிசிஐடி ஆய்வாளரிடம் அடையாளம் காட்டிய பொழுது எதிரிகளும் எங்களை பார்த்தார்கள். நான் கொடுத்த வாக்குமூலத்தை காவல் ஆய்வாளர் ஸ்டேட்மெண்டாக

நான் சொல்ல சொல்ல பதிவு செய்து கொண்டார். படித்துப்பார்தேன் நான் சொன்னபடி எழுதியிருந்தது. இது வகைக்கு ஆய்வாளர் என்னை விசாரிக்க விபரம் சொன்னேன்.

3

**C.C.1/18** P.W. 3

**எதிரிகள்தரப்புக் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கிற்கு முன்பு எனக்கு சிபிசிஐடி காவல் நிலையத்திற்கோ வேறு காவல் நிலையத்திற்கோ சென்ற பழக்கம் இல்லை. நானும் முத்துக்குமாரும் நாகப்பட்டினம் கீச்சாங்குப்பத்தில் இருந்து 3.2.2016 அன்று மதியம் 12 மணிக்கு எனக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் கிளம்பி 1/2 மணி நேரத்தில் வேளாங்கண்ணிக்கு சென்றோம். நான் சென்ற எனது இருசக்கர வாகனத்தின் பதிவு எண் டி.என்.51 எஈ0847 ஆகும். மேற்கண்ட விபரங்களை நான் போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன். இந்த விபரங்கள் பொய் என்றால் சரியல்ல. மதியம் 12.1/2 மணிக்கு மாதா குளம் சென்றுவிட்டோம். மாலை வாங்கி மாதா கோவிலில் சாமி கும்பிட்டுவிட்டு பிறகு டாய்லெட்கு செல்ல வந்தோம். நான் சொல்லுகின்ற டாய்லெட் என்பது மாதா குள கோயிலுக்கு மேற்கில் உள்ளது. மேற்கு பகுதியில் எந்தவித டாய்லெட்டும் இல்லை என்றால் சரியல்ல. மாதாகுளம் கோயில் அமைந்துள்ள பகுதியில் பயணிகள், யாத்திரிகர்கள் உட்காருவதற்கு என தனியாக சிமெண்ட் இருக்கை அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். டாய்லெட்கு அருகில் 20 மீட்டருக்கு அருகில் எந்த சிமெண்ட் இருக்கையும் கிடையாது என்றால் பக்கத்தில் இல்லை சற்று அருகில் உள்ளது. இந்த விபரத்தை போலிசில் சொல்லியுள்ளேன். நான் போன தேதியில் என்ன கிழமை என்று தற்பொழுது எனக்கு ஞாபகத்தில் இல்லை. மாதாகுளம் கோயிலை சுற்றி மந்திரித்த எண்ணெய், மெழுகுவர்த்தி விற்கும் இடம் மற்றும் மாதா சொரூபங்கள், போட்டோக்கள், மாதா பாடல்கள் சீடிக்கள் விற்கும் இடம் மற்றும் மாதாகுள தண்ணீர் கொடுக்கும் இடம் தனித்தனியாக உள்ளது என்றால் சரிதான். நான் அந்த கடைகளில் பேராலய ஊழியர்கள் பொருட்களை விற்றுக்கொண்டிருந்ததை பார்க்கவில்லை. அந்த கடைகளில் பேராலய பணியாட்கள் பொருட்களை விற்றுக்கொண்டிருந்ததை நான் பார்த்தேன் என்றும் தற்பொழுது பார்க்கவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. குழந்தை காணாமல் போன பதற்றத்தில்

இருந்த அந்த அம்மாவிடம் ஏன் பேன்ஸிகடையில் மதியம் 1 மணிக்கு வேலைக்கு செல்லாமல் டாய்லெட்டுக்கு வந்தீர்கள் என்று நாங்கள் கேட்கவில்லை. இந்த விபரத்தை அவரும் சொல்லவில்லை. சுகன்யா பேன்ஸி ஸ்டோர் எதிலும் வேலை செய்யவில்லை என்றும்



அதனால்தான் அந்த விபரத்தை எங்களிடம் சொல்லவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. குழந்தையை அதனுடைய அம்மா எதிரிகளிடம் விட்டுவிட்டு கழிப்பறைக்கு சென்ற பிறகு நானும் எனது நண்பரும் சாமான் வாங்குவதற்காக அருகில் இருந்த கடைக்கு 10 நிமிடம் சென்றுவிட்டு பைக் எடுக்க திரும்ப டாய்லெட்கு அருகில் வந்தபோது சுகன்யா அழுதுக்கொண்டிருந்தார் என்பதை போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன். நாங்கள் குழந்தையையும் எதிரிகளையும் அக்கம் பக்கம், கடற்கரை, கோயில் பக்கம் என எல்லா இடங்களிலும் தேடியதை போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன். சம்பவம் நடந்ததாக கூறப்படும் 8 மாதம் கழித்து சம்பவம் பொறுத்து செய்தி தாளில் விபரம் வந்தது குறித்து எந்த நியூஸ் பேப்பர் எந்த தேதியில் வந்தது என்று கேள்விகேட்டால் தினமலர் செய்தி தாளில் செய்தி வந்தது. ஆனால் அது எந்த தேதியில் என்று எனக்கு ஞாபகம் இல்லை. தினமலரில் எந்த பக்கத்தில் அந்த செய்தி வந்தது என்பதும் தற்பொழுது எனக்கு ஞாபகம் இல்லை. அந்த செய்தி தினமலர் நாளிதழில் வந்ததாக மட்டும் போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன். அந்த செய்தியில் சிபிசிஐடி போலிசார் வழக்கை எடுத்து நடத்துவதாக செய்தி வந்ததையும் தெரிந்து கொண்டேன் என்பதையும் போலிசாரிடம் விசாரணையில் சொல்லியுள்ளேன். நான் சிபிசிஐடி அலுவலகம் 23.3.2017 அன்று மதியம் 1 மணிக்கு எனது வீட்டில் இருந்து கிளம்பி கால் மணி நேரத்தில் சிபிசிஐடி அலுவலகம் சென்றேன். சிபிசிஐடி அலுவலகம் எங்கு உள்ளது என்று கேட்டால் அது புத்தூர் அருகில் டி.வி.எஸ் ஷோரூம் பக்கத்தில் உள்ளது. இந்த விபரத்தையும் போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் சொல்வதுபோல் புத்தூர் ரவுண்டானா அருகில் சிபிசிஐடி அலுவலகம் இருக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் வேளாங்கண்ணியில் டாய்லெட் அருகில் நின்ற பொழுது எதிரிகளும் சுகன்யாவும் பேசிக்கொண்டிருந்தபோது நான் செல்போன் பார்த்துக்கொண்டிருந்தேன் என்று சொன்னால் சரியல்ல. சுகன்யா டாய்லெட்டுக்குள் செல்லும்போதுதான் நான் செல்போன்

பார்த்தேன். நான் சிபிசிஐடி அலுவலகத்திற்கு 23.3.2017 அன்று சென்று ஆய்வாளரிடம் ஸ்டேட்மெண்ட் கொடுத்துவிட்டு 1/2 மணி நேரம் சிபிசிஐடி அலுவலகத்தில் இருந்தேன். சிபிசிஐடி போலிசார் தான் எனக்கு போன் செய்து எதிரிகள் இருவரையும் கைது செய்து காவல் நிலையத்தில் வைத்துள்ளோம் என்றும் வந்து அடையாளம்



காட்ட மேற்சொன்ன தேதியிலேயே சொன்னார். நான் காவல் நிலையம் சென்ற அன்று எதிரிகள் இருவரும் காவல் நிலையத்தில் இருந்தனர். குழந்தையும் இருந்தது. நான் மூவரையும் ஆய்வாளரிடம் அடையாளம் காட்டினேன். இந்த விபரத்தை போலிசில் சொல்லியுள்ளேன். நான் சொன்ன வாக்குமூலம் சரியாக உள்ளது என செக் பண்ணி நான் ஒரு எழுத்து மூலமான வாக்குமூலம் ஆய்வாளரிடம் கொடுத்தேன். அதில் நான் கையெழுத்துப்போட்டுக்கொடுத்தேன். அது ஒரு சிங்கிள் பேப்பர்தான். அந்த வகையில் நான் மொத்தம் மூன்று வாக்குமூலங்கள் கொடுத்தேன். மற்ற இரண்டு வாக்குமூலங்களில் நான் கையெழுத்துப் போடவில்லை. என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கியது தலைமை காவலர் என்றால் சரிதான். நான் கீச்சாங்குப்பத்தில் இருந்து வேளாங்கண்ணிக்கு கடந்த 3.2.2016 அன்று வேளாங்கண்ணிக்க சாமி கும்பிட சென்றதாக சாட்சியம் சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. நான் அங்கு சென்று மாதாகோவிலுக்கு சென்றுவிட்டு பிறகு மாதா குளம் கோயிலுக்கு சென்றபோது காணாமல் போனதாக சொல்லப்படும் குழந்தையையும் அதன் தயார் சுகன்யாவையும் மற்றும் ஆஜர் எதிரிகளையும் அங்கு வைத்து பார்த்ததாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. சுகன்யா எங்களிடம் எதிரிகள் தன்னுடைய குழந்தையை தூக்கி சென்றுவிட்டதாக சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்றதிற்கு வரும் வழியில் அல்லது வெளியில் வைத்து சிபிசிஐடி போலிசார் எதிரிகளை அடையாளம் காட்டியதன்பேரில் நீதிமன்றத்தில் எதிரிகளை அடையாளம் காட்டியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் போலிசாரால் தயார் செய்யப்பட்ட சாட்சி என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் பொய்யாக சாட்சியம் முன்வைக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.